செய்தி வெளியீடு எண்–698 நாள் : 17.08.2010

## செய்தி வெளியீடு

## உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி, நடைபெற்ற உலகளாவிய கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற 8 பேருக்கு 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுகள்!

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்!

கோவை மாநகரில் கடந்த சூன் திங்களில் மிகச்சிறப்பாக நடைபெற்ற உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி, "சங்கத் தமிழ் அனைத்தும் தா" எனும் தலைப்பில் உலகளாவிய கவிதைப்போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டியில் வெற்றி பெறுவோர்க்கு முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசுடன் தங்கப்பதக்கமும்; இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பரிசுடன் தங்கப்பதக்கமும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுடன் தங்கப்பதக்கமும் அளிக்கப்படும் என்றும், ஊக்கப்பரிசாக 5 பேருக்குத் தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்றும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பைத் தொடர்ந்து, கவிதைப் போட்டிக்கு வரப்பெற்ற கவிதைகள் தேர்வு செய்யப்பட்டு, பரிசுக்குரிய கவிதைகளை எழுதியவர்களின் விவரம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் நிறைவு நாளாகிய 27.6.2010 அன்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, "சங்கத்தமிழ் அனைத்தும் தா" கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற புதுவைப் பல்கலைக்கழகத்தின் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புல உதவிப் பேராசிரியர் முனைவர் பா. இரவிக்குமார் அவர்களுக்கு முதற்பரிசாக ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப்பரிசுடன் தங்கப் பதக்கம்;

இரண்டாம் பரிசு பெற்ற திருச்சி அண்ணா பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் பேராசிரியை நீ. கண்மணி அவர்களுக்கு 75 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுடன் தங்கப் பதக்கம்;

மூன்றாம் பரிசு பெற்ற குமரி மாவட்டம் தக்கலை திரு. எச்.ஜி. ரசூல் அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுடன் தங்கப் பதக்கம்;;

ஆறுதல் பரிசுகளாக, திண்டுக்கல் புலவர் துரை. முருகு; சென்னை பூவிருந்தவல்லி கவிஞர் குடந்தையான்; சென்னை அடையாறு பாரதிபங்கன் என்கிற முனைவர் மு. பாலகிருட்டிணன்; மலேசிய நாட்டைச் சேர்ந்த தமிழ்மணி எல்லோன் என்கிற எஸ். கதிரேசன்; பெரம்பலூர் அகரம் அமுதா என்கிற எம்.சுதாகர் ஆகியோருக்குத் தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு என கவிதைப் போட்டியில் வெற்றிபெற்ற 8 பேருக்கும் மொத்தம் 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பரிசுக்குரிய காசோலைகளை முதலமைச்சர் கலைஞர் இன்று (17.8.2010) வழங்கி வாழ்த்துகள் கூறினார்.

இந்நிகழ்வின்போது, உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு. க. கணேசன், இ.ஆ.ப., உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் தனி அலுவலர் திரு.க.அலாவுதீன், இ.ஆ.ப., கவிப்பேரரசு திரு.வைரமுத்து ஆகியோர் உடனிருந்தனர்.

****

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9